


தனி பிரதி
ரூ.10/-

PORIYIYAL KADHIR



# பொறியியல் கதிர்

கதிர் 44 | பாரிப்பு 10 | திருவள்ளுவர் ஆண்டு 2044 | ஜூன் 2013



ரோஜாவின் ராஜா முன்னாள் பாரத பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் நினைவு நாளில் (மே-27) அவரின் தியாகங்களை போற்றுவோம்.

நூற்றாண்டு விழா சங்கம்

## தமிழ்நாடு பொறியியல் சங்கம்

TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD

தோற்றம்
1910

நூற்றாண்டு
2010

பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை – 5.

அரசு ஆணை எண்.Ms.822 நாள்: 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது.



பொறியாளர் பொ.பா.போகன் கண்காணிப்புப் பொறியாளருக்கு பொறியாளர் என்.ஆறுமுகம் தலைவர் சேலம் கிளை தமிழ்நாடு பொறியியல் சங்கம் அவர்கள் பொன்னாடை அணிவித்தார்



பொறியாளர் பொ.பா.போகன் கண்காணிப்புப் பொறியாளருக்கு பொறியாளர் ஆர்.வேதநாராயணன் சேலம் கிளை தமிழ்நாடு பொறியியல் சங்கம் அவர்கள் நினைவுப் பரிசு வழங்குகின்றார். உடனிருப்பவர் பொறியாளர் என்.ஆர்.சுப்ரமணியம் செயலாளர் தருமபுரி கிளை.




பொறியாளர் பொ.பா.போகன் கண்காணிப்புப் பொறியாளர் அவர்களின் ஏற்புரை



# திருமண அழைப்பிதழ்

**அன்புடையீர்! வணக்கம்.**

நிகழும் மங்களகரமான விஜய வருடம் ஆனி மாதம் 9-ம் தேதி (23.06.2013) ஞாயிற்றுக்கிழமை வளர்பிறை திதி மூல நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 7.30 மணிக்குமேல் 9.00 மணிக்குள் கடக லக்கினத்தில்



தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், எருமியாம்பட்டி
ஊமையக்கவுண்டர்-சின்னம்மாள் மற்றும் அரூர் வட்டம், சோரியம்பட்டி
னசாமி (தலைமை ஆசிரியர் ஓய்வு)-யசோதா ஆகியோரின் பேத்
நகுலன்-ரேவதி ஆகியோரின் குமார்த்தியுமாகிய திருநிறைச்செ



**N. திவ்யா,** B.E.,

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், K.வேட்ரப்பட்டி
தெய்வத்திருவாளர்கள் மொட்டைய கவுண்டர்-பெரியாக்காள் மற்றும்
தெய்வத்திருவாளர்கள் செல்லன்-சாரதா ஆகியோரின் பேரனும்,
மொ.நைனான் (Jr.Asst.TNCSC)-செல்லக்கண்ணு ஆகியோரின் இளைய குமாரன்
திருநிறைச்செல்வன்

**N. சிலம்பரசன்,** B.E.,

(Deputy Superintendent of Police, Kumbakonam)

இவர்களுக்கு திருமணம் செய்வதாய் பெரியோர்களால் நிச்சயித்தவண்ணம் மேற்படி திருமணம் அரூர், Bypass சாலையில் உள்ள **N.N.மஹாலில்** நடைபெறுவதால் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தியருள அன்புடன் அழைக்கின்றோம்.



**தங்கள் அன்புள்ள,**
**Er. U. நகுலன், B.E.,**
உதவிச் செயற்பொறியாளர், பொ.ப.து.,
கிருஷ்ணகிரி.
செல்: 98424 09592.

பொதுச் செயலாளர் மடல்

மடல் – 10(2012-2013)

# தொடரும் நம் பயணம்......



## அன்பார்ந்த பொறியாளர் சகோதரர்களே! வணக்கம்!

**முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டிடம்), தலைமைப் பொறியாளர் (கட்டிடம்), சென்னை மண்டலம் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை பொறியாளர் ஆர்.கோபாலகிருஷ்ணன் அவர்களுக்கு பணி நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளதற்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.**

உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியல் காலிப்பணியிட மதிப்பீடு (Estimate of Vacancy) 101 எண்ணிக்கைக்கு அரசுக்கு அனுப்பப்பட்டது. அது சில குறிப்புரைகளுடன் முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்துக்கு திருப்பப்பட்டது. குறிப்புரைகள் சரிசெய்யப்பட்டு மீண்டும் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. தற்போது காலிப்பணியிட மதிப்பீடு சுமார் 181ஆக இருக்க வாய்ப்பிருக்கிறது.

தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலைப் பொறியாளர்களை தேர்வுச் செய்ய அரசிடமிருந்து தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையத்திற்கு அனுப்ப வேண்டிய கருத்துரு நிலுவை 45 எண்ணிக்கைக்கு தற்போது தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

இளநிலைப் பொறியாளர்களின் பணிவரன்முறை (Regularisation) சம்பந்தமாக கருத்துரு கேட்கப்பட்டு இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் கருத்துரு வந்து சேரவில்லை. சென்னை மண்டல அலுவலகத்திலிருந்து மட்டும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மற்ற தலைமைப் பொறியாளர்களுக்கும், கண்காணிப்புப் பொறியாளர்களுக்கும் நினைவூட்டுக் கடிதம் சங்கத்தின் மூலமாக எழுதப்பட்டுள்ளது. எனவே மண்டலச் செயலாளர்கள், கிளைச் சங்கப் பொறுப்பாளர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நேரில் சந்தித்து மேற்கண்ட கருத்துருக்களை அனுப்பி வைக்க உரிய முயற்சிகள் எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். இதைப்போலவே பணி ஆய்வாளர் பதவியிலிருந்து தொழில் நுட்ப உதவியாளர் பதவி உயர்வு அளிப்பது சம்பந்தமாக கருத்துரு கோரப்பட்டு பல மாதங்களாகியும் மேற்கண்ட கருத்துரு முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்திற்கு முழுமையாக வந்து சேரவில்லை. எனவே சங்கப் பொறுப்பாளர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை சந்தித்து கருத்துரு விரைவில் வந்து சேர சிறப்பு கவனம் செலுத்தி முயற்சிகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அரசாணை எண்.1 பொ.ப.து. நாள் 02.01.1990ன் படி தொழில் நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து உதவிப் பொறியாளர் பதவி பெற்றவர்களின் பணிவரன்முறை சம்பந்தமாக விரிவாக விவாதித்து முடிவெடுக்க வருகிற 08.06.2013 அன்று சென்னையில் சம்பந்தப்பட்ட உதவிப் பொறியாளர்கள் மற்றும் மையச் சங்கப் பொறுப்பாளர்களை வைத்து ஒரு சிறப்பு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கூட்டத்தில் விவாதித்து அடுத்தக் கட்ட நடவடிக்கை குறித்து முடிவெடுக்கப்படும்.

நூற்றாண்டு விழா மலர் தயாரிக்கும் பணி தாமதமாகி கொண்டு வருகிறது. காரணம் சில முக்கியப் பிரமுகர்களிடமிருந்து வாழ்த்துச் செய்தி (Greeting Message) வரப்பெறாமல் இருப்பதுதான் காரணம். வாழ்த்துச் செய்தி பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம். இயக்க வரலாறு பாகம்-2 மற்றும் நூற்றாண்டு விழா மலர் தயாரிப்பது தாமதமாகி கொண்டு வருவதால் நூற்றாண்டு விழா தாமதமாகிக் கொண்டிருக்கிறது. எனவே விரைந்து மேற்கண்ட வேலையை முடித்து நூற்றாண்டு நிறைவு விழாவை முடிக்க தீவிர முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம்.

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்**

பொதுச்செயலாளர்

**த. முருகேசன்,** பொதுச் செயலாளர்
செல்பேசி எண் 9444 999 588, 9281 309 688
**E.mail: d.murugavelsivan@gmail.com**

$$\text{Ego} = \frac{1}{\text{Knowledge}}$$

More the Knowledge
Lesser the Ego,
Lesser the Knowledge
More the Ego.
- Albert Einstein

# இளநிலைப் பொறியாளர்களை பணிவரன்முறை செய்ய தடையாக இருந்த வழக்கின் தீர்ப்பு

**IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS**
**DATED: 22.04.2013**
**CORAM**
**THE HONOURABLE MR.JUSTICE A.ARUMUGHASWAMY**
**W.P.No.23630 of 2004**

Association of Engineers
Tamilnadu Public Works Department,
(Recognised in G.O.No.1701 dated 20/10/1936
rep. By its General Secretary,
Mr.V.Pushparaj,
Chepauk, Chennai - 600 005. . . . Petitioner

Vs.

1. The State of Tamilnadu rep.
By the Secretary to Government,
Public Works Department,
Fort St. George, Chennai - 600 009.

2. The Engineer-in-Chief/WRO &
Chief Engineer (General)
Public Works Department,
Chepauk, Chennai - 600 005.

3. Tamilnadu Engineering Association,
Tamilnadu, P.W.D.
Recognised in G.O.Ms.No.822 dt.27.02.1920
rep. By Secretary (organisation & legal)
Mr.N.Ganesa Prakesh, Chepauk, Chennai - 5. . . . Respondents
(R3 impleaded as per order dt.11.09.04 in WPMP.No.30205/04)

Writ petition filed under Article 226 of the Constitution of India to India for the issuance of a Writ of declaration declaring the action of the respondents or their subordinates from in any manner filing up the vacancies in cadre of Section Officers (Junior Engineers) from among diploma holders in any manner whatsoever in excess of 25% quota as illegal and consequently direct the respondents to re-estimate the vacancies so as to adhere to 3:1 quota.

For Petitioner : Mr.R.Thiagarajan, Sr.Counsel
for Mr.D.Bharatha Chakravarthy

For R1 and R2 : Mr.R.Vijaya Kumar,
Additional Government Pleader

For R3 : Mrs.Malarvizhi Udayakumar

**O R D E R**

The petitioner has come forward with this petition seeking for the issuance of writ of declaration, declaring the action of the respondents or their subordinates from in any manner filing up the vacancies in cadre of Section Officers (Junior Engineers) from among diploma holders in any manner whatsoever in excess of 25% quota as illegal and consequently direct the respondents to re-estimate the vacancies so as to adhere to 3:1 quota.

2. The writ petitioner is the members of the Association of Engineers. As per G.O.Ms.No.2227, dated 23.10.1977, the post of Section Officers is to be manned by persons who possess "a degree in Engineering" and diploma holders in the ratio of 3:1 and who have been in service in the Tamil Nadu Public Works Department and seeking promotion for a long time. However, the posts are often filled up only by way of diploma holders, giving a go by to the above quota rule. Further, the respondents issued orders appointing 63 diploma holders as Junior Engineers and the contention of the petitioner is that the action of the respondents in filling up the cadre of Section Officers from among diploma holders alone far in excess of the quota, is illegal. Hence, the petitioner has come up with this writ petition for the relief as stated above.

3. In the reply affidavit filed by the third respondent, it is stated that a total number of 1027 Assistant Engineers have been directly recruited in the year 2009 to 2011, which is more than the ratio 3:1 as specified in the rules.

4. It is submitted by the learned counsel for the respondents that since 3:1 ratio has been adopted, the grievance of the petitioner is redressed. Further, the grievance of the petitioner regarding the action of the respondents promoting the diploma holders far in excess of the quota has also been meted out. Hence, learned counsel for the respondents submitted that the prayer in the writ petition has become infructuous.

5. Since the relief sought for by the petitioner has already been granted, the prayer in the writ petition has become infructuous. Accordingly, Writ Petition is dismissed as infructuous.

6. Learned counsel for the third respondent submitted that the service of 63 diploma holders, who were promoted by order dated 17.08.2004 have not been regularised and requested to pass orders to make them permanent based on their existing services. The same is recorded and the respondents are directed to do so, if there is no impediment.

Sd/-
Asst. Registrar

/ True Copy /

Sd/-
Sub Asst. Registrar

# 04.05.2013 அன்று சென்னையில் நடைபெற்ற மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டம்

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டம் 04.05.2013 அன்று காலை 10.30 மணிக்கு சென்னை சேப்பாக்கம் பொறியியல் இல்லம் பொறியாளர் சி.ப.சண்முகம் அரங்கில் மாநிலத் தலைவர் பொறியாளர் என்.எஸ்.கௌரிசங்கர் அவர்கள் தலைமையிலும், பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

மரியாதைக்குரிய மூத்தப் பொறியாளர்கள் ஆர்.வெங்கடசுப்பு, சி.ப.சண்முகம், ஏ.எம்.பாபு, டி.பி.பாலசுப்பிரமணியன் மற்றும் பொறியாளர் பி.நாகலிங்கம் தலைவர் கடலூர் கிளை ஆகியோர் கூட்டத்தில் கலந்துக் கொண்டனர்.

மாநிலத் தலைவர் பொறியாளர் என்.எஸ்.கௌரிசங்கர் அவர்கள் தலைமையுரை ஆற்றினார்.

பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் தன்னுடைய உரையில் மையச் சங்க நடவடிக்கைகள் குறித்து விரிவாக பேசினார். இளநிலைப் பொறியாளர்/உதவிப் பொறியாளர் பணிவரன்முறை, இளநிலைப் பொறியாளர் ஊதிய மாற்றம், அடுத்த உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு, தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலைப் பொறியாளர்களை தேர்ந்தெடுப்பதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், நூற்றாண்டு விழா உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து பேசினார்.

நூற்றாண்டு விழா குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. மையச் சங்க பொறுப்பாளர்கள், மண்டலச் செயலாளர்கள், மூத்தப் பொறியாளர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்தார்கள்.

நூற்றாண்டு விழா மலர் முகப்பு அட்டையை வடிவமைக்க மரியாதைக்குரிய மூத்தப் பொறியாளர் ஏ.எம்.பாபு அவர்களிடம் தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் சார்பாக ஏற்கனவே கோரிக்கை வைக்கப்பட்டதின் அடிப்படையில், நூற்றாண்டு விழா மலர் முகப்பு அட்டை மாதிரிகள் கூட்டத்தில் வைத்து விளக்கினார். நூற்றாண்டு விழா குறித்து அறிவுரைகள் வழங்கினார்.

மூத்தப் பொறியாளர்கள் ஆர்.வெங்கடசுப்பு, சி.ப.சண்முகம், டி.பி.பாலசுப்பிரமணியன் ஆகியோர் நூற்றாண்டு விழா, நூற்றாண்டு விழா மலர், இயக்க வரலாறு குறித்து பேசினார்கள்.

மேற்கண்ட மூத்தப் பொறியாளர்களை தவிர்த்து தமிழ்நாடு பொறியியல் சங்க மையச் சங்கப் பொறுப்பாளர்கள் மட்டும் தனியாக ஏற்கனவே நான்கு மூத்தப் பொறியாளர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு, FORDET திருச்சி மண்டலத்தின் சார்பாக 34 மூத்தப் பொறியாளர்கள் கையொப்பமிட்டு மேற்கண்ட நான்கு மூத்தப் பொறியாளர்கள் மீது நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை திரும்பப் பெற வேண்டும் என்று FORDET மையச் சங்கத்திற்கு அனுப்பி விட்டு தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு நகலிடப்பட்ட கடிதம் குறித்து விவாதித்து மேற்கண்ட தீர்மானத்தை திரும்பப் பெற முடியாது என்று முடிவு செய்யப்பட்டது.

கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டது.

**முடிவுகள் :**

1. அரசாணை எண்.1 பொ.ப.து. நாள் 02.01.1990ன் படி தொழில் நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து உதவிப் பொறியாளர் பதவி பெற்றவர்களின் பணிவரன்முறை மற்றும் அடுத்தக்கட்ட உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு குறித்து விவாதித்து முடிவெடுக்க தமிழ்நாடு பொறியியல் சங்க மையச் சங்க பொறுப்பாளர்கள் மற்றும் மேற்கண்ட உதவிப் பொறியாளர்களை கொண்டு 08.06.2013 அன்று ஒரு சிறப்பு கூட்டம் சென்னையில் நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது.

2. வெளிநாட்டில் இருக்கும் மூத்தப் பொறியாளர் திரு.ஆர்.ஸ்ரீராமன் அவர்கள் நூற்றாண்டு விழா நிதிக்குழுவில் இருந்து தான் விலகுவதாக தொலைபேசியில் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர் கோரிக்கையை ஏற்றுக் கொள்வது என்று முடிவெடுக்கப்பட்டது.

3. இயக்க வரலாறு, நூற்றாண்டு விழா மலர் இன்னும் முடிவடையாததால் நூற்றாண்டு விழாவை ஜூலை மாதத்தில் நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது.

---

பெறுதல்

அனைத்து தலைமைப் பொறியாளர்கள்
மற்றும் கண்காணிப்புப் பொறியாளர்கள்,

ஐயா,

பொருள்: இளநிலைப் பொறியாளர்கள் பணிவரன்முறை (Regularisation) சம்பந்தமாக கருத்துரு கேட்டல் - சம்பந்தமாக.

பார்வை: முதன்மை தலைமைப் பொறியாளர் (க), தலைமைப் பொறியாளர் (க), சென்னை மண்டலம் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் கடித எண். எஸ் 2(4) / 20483 / 2010/நாள் 26.03.2013.

பார்வையில் கண்டுள்ள கடிதத்தில் இளநிலைப் பொறியாளர்களின் பணிவரன் முறை சம்பந்தமாக கருத்துரு அனுப்ப கோரப்பட்டிருந்தது. இதற்கு அதிக முக்கியத்துவம் (Top Priority) கொடுக்கவும் வலியுறுத்தப்பட்டிருந்தது. ஆனால் தங்கள் அலுவலகத்திலிருந்து மேற்கண்ட கருத்துரு அனுப்பப்படவில்லை என தெரியவருகிறது. எனவே உடனடியாக மேற்கண்ட கருத்துருவை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சேப்பாக்கம், சென்னை - 5.

***தன்னம்பிக்கை இல்லாதவன் வாழ்க்கை, காலால் நடப்பதற்குப் பதிலாகத் தலையால் நடப்பது போலாகும்.***

## தமிழ்நாடு பொறியியல் சங்கம் (பொ.ப.து)
## சேப்பாக்கம், சென்னை - 600 005.

**<u>சிறப்புக் கூட்ட அழைப்பிதழ்</u>**

பெறுதல்:

1. மையச் சங்கப் பொறுப்பாளர்கள்.
2. அரசு ஆணை எண்.1 பொ.ப.து. நாள் 02.01.1990ன் படி தொழில் நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து உதவிப் பொறியாளர் பதவி பெற்ற உதவிப் பொறியாளர்கள்.

**நாள் : 08.06.2013, சனிக்கிழமை காலை 10.30 மணி**

**இடம் : பொறியாளர் சி.ப. சண்முகம் அரங்கம்,**
**பொறியியல் இல்லம்,**
**10, லால் முகமது தெரு,**
**சேப்பாக்கம், சென்னை - 5.**

அன்பார்ந்த பொறியாளர் சகோதரர்களே! வணக்கம்!


அரசு ஆணை எண்.1 பொ.ப.து. நாள் 02.01.1990ன் படி தொழில் நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து உதவிப் பொறியாளர் பதவி பெற்றவர்களின் பணிவரன்முறை, உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு போன்ற அம்சங்கள் குறித்து விவாதித்து சில முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டியுள்ளதால் தவறாது கூட்டத்தில் கலந்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(து. முருகேசன்)
பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சேப்பாக்கம், சென்னை - 5.

**<u>பின்குறிப்பு:</u>**

சுமார் 20 உதவிப் பொறியாளர்களின் முகவரி நமக்கு கிடைக்காததால் அவர்களுக்கு கடிதம் அனுப்ப முடியவில்லை. எனவே பொறியாளர்கள் தங்களுக்கு தெரிந்த உதவிப் பொறியாளர்களுக்கு தகவல் தெரிவித்து உடன் அழைத்து வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

***வீரமில்லாத மக்களைப் பெற்ற நாடு அடிமை நாடாகவே இருக்கும்.***

# கலங்கரை  விளக்கம்

## நிதித் (ஓய்வூதியம்) துறை

## அரசாணை எண்.325, நாள் 28.11.2011

**(கார்த்திகை - 12, திருவள்ளுவர் ஆண்டு 2042)**

ஓய்வூதியம் - அரசு ஊழியர்களின் திருமணமாகாத / விவாகரத்தான / விதவை மகள்களுக்கு வாழ்நாள் முழுவதற்கும் குடும்ப ஓய்வூதியம் வழங்குவது - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**படிக்கவும்:-**

1. அரசாணை எண்.327, நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள் 30.08.2001.
2. இந்திய அரசு, பணியாளர் பொது மக்கள் குறை தீர்ப்பு மற்றும் ஓய்வூதிய அமைச்சகம், ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியர் நலத் துறை அலுவலக குறிப்பாணை எண்.1/19/03-P&PW(E), நாள் 30.08.2004.
3. இந்திய அரசு, பணியாளர் பொது மக்கள் குறை தீர்ப்பு மற்றும் ஓய்வூதிய அமைச்சகம், ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியர் நலத் துறை அலுவலக குறிப்பாணை எண்.1/19/03-P&PW(E), நாள் 06.09.2007.
4. அரசாணை எண்.235, நிதித் (ஊதிய பிரிவு) துறை, நாள் 01.06.2009.

----

**ஆணை:-**

மத்திய அரசு தனது ஓய்வூதியதாரர்களின் திருமணமாகாத / விதவை / விவாகரத்தான மகள்களுக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கி ஆணை வழங்கியுள்ளதன் அடிப்படையில், தமிழக அரசின் ஓய்வூதியதாரர்களின் திருமணமாகாத / விதவை / விவாகரத்தான மகள்களுக்கு அவர்களது வாழ்நாள் முழுவதற்கும் குடும்ப ஓய்வூதியம் வழங்க பல்வேறு ஓய்வூதியதாரர் சங்கங்கள், ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களின் திருமணமாகாத மகள்கள் அரசிற்கு தொடர்ந்து கோரிக்கை வைத்து வந்தார்கள். அவர்களின் கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலித்து, அதனை ஏற்பதென அரசு முடிவெடுத்துள்ளது.

2. அதன் படி மத்திய அரசு ஆணையிட்டுள்ளதுபோல் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களின் திருமணமாகாத / விதவை / விவாகரத்து பெற்ற மகள் ஆகியோருக்கு அவர்கள் 25 வயதைக் கடந்த பிறகும் குடும்ப ஓய்வூதியம் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, வழங்கப்பட வேண்டும் என அரசு ஆணையிடுகிறது.

1) ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களின் 25 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத மகள்களும் / விதவை / விவாகரத்தான மகள்களும் அவர்கள் வாழ்நாள் முழுமைக்கும் குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியுடையவர்.

2) ஒரு குடும்பத்தில் 25 வயதிற்குக் குறைவான, குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியுடைய குழந்தைகள் அவர்கள் குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்கான தகுதிக் காலம் முடிந்த பின்னரோ, மேலும் அக்குடும்பத்தில் வேறு மாற்றுத் திறன் படைத்த குழந்தைகள் இல்லாவிடில் மட்டுமே, 25 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத / விதவையான / விவாகரத்தான மகள்கள் வாழ்நாள் குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுவர்.

3) இத்தகைய 25 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத மகள்கள் மற்றும் விதவை / விவாகரத்தான மகள்கள், திருமணமோ / மறுமணமோ புரிந்தபின் அவர்களின் குடும்ப ஓய்வூதியம் அத்திருமணத்திற்கு பின் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இதனை உறுதி செய்யும் பொருட்டு மேற்கூறிய ஓய்வூதியதாரர்கள் ஒவ்வொரு வருடமும் அவர்கள் "மணம் / மறுமணம் புரியாமை" சான்றிதழ் ஓய்வூதியம் வழங்கும் அலுவலரிடம் வழங்க வேண்டும்.

4) 25 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத / விதவை / விவாகரத்தான மகள்களில் அவர்களின் வயதின் அடிப்படையில் மூத்தவருக்கு முதலில் வாழ்நாள் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும். மூத்தவர் மறுமணம் புரிந்தாலோ / இறக்க நேரிட்டால் மட்டுமே அடுத்த இளைய மகள் குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியுடையவராவார்.

5) திருமணமாகாத மகள்கள் / விதவை / விவாகரத்தான மகள்களின் மாத வருமானம் ரூ.2550/-க்கு மிகாமல் இருக்க வேண்டும். இது தொடர்பாக வருமானச் சான்றிதழை ஆண்டுதோறும் ஓய்வூதியம் வழங்கும் அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

3. உரிய ஆவணங்களின் அடிப்படையில் மேலே உள்ள நிபந்தனைகளை நிறைவு செய்யும் இனங்களில் சென்னையைப் பொறுத்தவரை ஓய்வூதியம் வழங்கும் அலுவலரும் / அந்தந்த மாவட்டங்களில் உரிய மாவட்டக் கருவூல அலுவலர்களும் மேலே பத்தி இரண்டில் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் நம்பகத் தன்மையை உறுதி செய்து கொண்டு குடும்ப ஓய்வூதியத்தை ஒப்பளிப்பு செய்ய அரசு அதிகாரமளிக்கிறது. வங்கிகள் மூலமாக ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்களைப் பொறுத்தவரை மேற்கண்ட நடைமுறையைப் பின்பற்றி ஓய்வூதியம் வழங்கும் அலுவலர் (Pension Pay Officer) / மாவட்டக் கருவூல அலுவலர்கள் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு அனுப்பி வைக்கவும் அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை வெளியிடப்படும் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

5. தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள் 1978-க்கு தக்க திருத்தம் தனியாக வெளியிடப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.சண்முகம்,
அரசு முதன்மைச் செயலாளர்.

---

## பணி ஓய்வு பெற்றவர்கள்

**செயல்முறை ஆணை எண்.எஸ்.1(2)/20002/2013/நாள் 30.05.2013ன் படி 31.05.2013 பி.ப. அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் விபரம்.**

| வ. எண் | பெயர் திருவாளர்கள் | பதவிப் பெயர் |
|---|---|---|
| 1. | A. தர்மராஜ் | ஆட்சி அலுவலர் |
| 2. | S. முத்து | ஆட்சி அலுவலர் |
| 3. | K. கௌசல்யா | ஆட்சி அலுவலர் |
| 4. | A. மகாராஜா | இளம் பொறியாளர் |
| 5. | K. ராமலிங்கம் | இளம் பொறியாளர் |

**இரா.கோபாலகிருஷ்ணன்,**
முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) (ம)
தலைமைப் பொறியாளர், (கட்டடம்) பொ.ப.து., சென்னை மண்டலம்
மற்றும் தலைமைப் பொறியாளர், (பொது), பொ.ப.து. சார்பில்

# விடை பெறுகின்றேன்



பெயர் : பொறிஞர்.பொ.பா.மோகன், டிசி.இ, பி.இ,
இணைத் தலைமைப் பொறியாளர், பொ.ப.து, நீ.ஆ.து,
இயக்கம் மற்றும் பராமரிப்பு, சென்னை-5.

பிறந்த தேதி : 10.05.1955

அரசுப் பணியில்
சேர்ந்த நாள் : 17.12.1975 மு.ப.

பணிஓய்வு நாள் : 31.05.2013 பிப.

முகவரி : 39ஏ/140, புட்டா நாகைய்யர் தெரு,
சேலம் - 636 001.

அலைபேசிஎண் : 99940 30728, 91501 12832

வலைதள முகவரி: www.pbmohan.pwd@gmail.com

வள்ளுவர் கூற்று - "காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

வணக்கம்,

நான் சென்ற 1971ல் 11ஆம் வகுப்பு (Bifurcated Engineering) முடித்து 1971-1974 வரை சேலம் தியாகராஜர் பாலிடெக்னிக்கில் சேர்ந்து சிவில் பிரிவில் பட்டயம் முடித்தேன்.

மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் 14.10.1974 முதல் 20.01.1975 வரை நெடுஞ்சாலைத் துறையில் சர்வே அஸிஸ்டென்டாகவும், 24.05.1975 முதல் 30.06.1975 வரை ஊரக வளர்ச்சித் துறையில் கூடுதல் வறட்சி நிவாரண ஓவர்சீயராகவும் பணிபுரிந்தேன்.

பின்பு, பொதுப்பணித்துறையில் 17.12.1975லிருந்து 31.01.1982 வரை வரைவாளர் நிலை-3 மற்றும் வரைவாளர் நிலை-2லும், பின்பு 01.02.1982 முதல் 14.12.1999 வரை இளம் பொறியாளர், உதவிப் பொறியாளர் நிலையிலும், 15.12.1999 முதல் 30.06.2008 உதவிச் செயற்பொறியாளர் நிலையிலும், 01.07.2008 முதல் 28.04.2013 வரை செயற்பொறியாளர் நிலையிலும், பின்பு 29.04.2013 முதல் 31.05.2013 வரை கண்காணிப்புப் பொறியாளர் நிலையிலும் பணிபுரிந்து 31.05.2013 பிற்பகல் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்றேன்.

எனது பணிக்காலத்தில் என்னுடன் பணிபுரிந்த பல பொறியாளர்கள் 35 ஆண்டு காலம் இளம் பொறியாளராகவே பணிபுரிந்து இளம் பொறியாளராகவே ஓய்வு பெற்றுள்ளதை நான் நன்கு அறிவேன். அவர்களின் மன உளைச்சல் மற்றும் வேதனைகள் அளப்பரியது. இந்நிலையில் எனது பணிக்காலத்தில் பொதுப்பணித்துறையில் ஏழு பணி நிலைகளைக் கடந்து கண்காணிப்புப் பொறியாளராக நான் உயர்ந்து ஓய்வு பெறுவதற்கு பகுதி நேர பட்டப் படிப்பே காரணமாகும். இந்நிலையில் பகுதி நேரப் பட்டப் படிப்பிற்கு அணுவாய், விதையாய், வேராய் இருந்து ஆல விருட்சமாக வளர உதவிய தீர்க்கதரிசிகள், மூத்தப் பொறியாளர்கள் மற்றும் தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை செலுத்துகின்றேன்.

எனது இளம் பொறியாளரிலிருந்து உதவிப் பொறியாளராக பெயர் மாற்றம், உதவிப் பொறியாளரில் முதுநிலை, பட்டப் படிப்பு முடித்த மறுநாள் முதல் அதாவது 20.12.1981 வழங்குதல் முதல் உதவிச் செயற்பொறியாளர் முதுநிலை, செயற்பொறியாளர் முதுநிலை

மற்றும் கண்காணிப்புப் பொறியாளராய் பணியமர்வு போன்ற தொடர் ஓட்டத்தின் போது நான் மனம் சோர்ந்து வருந்திய போது எல்லாம் தோளோடு தோள் நின்று உற்சாகப்படுத்தி, ஊக்கப்படுத்தி, உரிய முதுநிலை மற்றும் பணியமர்வு பெற உதவிய தமிழ்நாடு பொறியியல் சங்க அனைத்து பொறுப்பாளர்களுக்கும் எனது நன்றியினை காணிக்கையாக்குகின்றேன். இந்நாளில் நான் தெரிவித்துக் கொள்வது யாதெனில், தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு எனது நினைவு உள்ள நாள் வரையிலும் நன்றியுடனும் மற்றும் உண்மையான உறுப்பினராகவும் இருப்பேன் என்று உறுதியளித்து விடைபெறுகின்றேன்.

நன்றி, நன்றி
தமிழ்நாடு பொறியியல் சங்கம் வாழ்க வாழ்க
பொறியாளர் ஒற்றுமை ஓங்குக ஓங்குக

என்றும் நன்றியுடன்,
**பொ.பா.மோகன்**

---



## சிங்கமும் சுண்டெலியும்

மே 2013 பொறியியல் கதிரில் பக்கம் 24ல், நால்வரில் ஒருத்தர் எழுதிய கடிதத்தின் சில பகுதிகளை துண்டு துண்டாய் வெளியிட்டுள்ளீர்கள்.

மேடை நாகரீகம் தெரியாத மூத்த கிழம் என்று தியாகச் செம்மல் சி.ப.சண்முகம் பற்றி மறை முகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்று வெகுண்டெழுந்தீர்கள். இதில் கோபப்பட என்ன இருக்கிறது? உள்ளதைத் தானே எழுதியுள்ளார். நிதானமாக யோசித்துப் பாருங்கள்.

பணிக்காலத்தல் தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் பால் ஈடுபாடு கொண்டு, வீட்டு வேலைகளையெல்லாம் புறம் தள்ளிவிட்டு, உளமார உன்னதமாக உழைத்தவர்கள் ஏராளம்.

பிடரியை சிலிர்த்துக் கொண்டு சீறியெழுந்த காலங்கள் ஓடிவிட்டன. வயது முதிர்வு காரணமாகவோ, நோடி காரணமாகவோ சிங்கங்கள் இன்று நிழலில் படுத்துக் கொண்டிருக்கலாம். சுண்டெலிகள் முதுகின் மேல் ஏறி விளையாடலாம். அந்த அற்ப சந்தோஷத்தை நாம் ஏன் கெடுப்பானேன். ஆனாலும், சுண்டெலிகள் ஒருபோதும் சிங்கங்களாக மாற முடியாது. இதுதான் யதார்த்தம்.

## அடிப்படை விஷயமே தெரியலையே

மே-2013 பொறியியல் கதிரில் பக்கம் 23ல் வெளியாகியுள்ள ஒரு செய்தியைப் படித்து அதிர்ந்து போனேன். தமிழ்நாடு பொறியியல் சங்கத்தில் உறுப்பினரல்ல நான் என்ற பீடிகையுடன் அந்த நால்வரில் ஒருத்தர் சொல்லியிருப்பது, அவரின் அறியாமையைத் தான் காட்டுகிறது. புறம்போக்கு நிலம் தான் அரசுக்குச் சொந்தமானதாக இருக்க முடியும். சங்கத்திற்கு சொந்தமாக ஒரு கட்டிடம் வேண்டும் என்று 35 ஆண்டுகளுக்கு முன்பே திட்டம் தீட்டினோம். ஆனாலும் பொருளாதார நிலையைப் பெருக்கிக் கொண்டு காலப்போக்கில் சேப்பாக்கத்தில் ஒரு இடத்தையும், அதன் பின்னர் ஒரு கட்டிடத்தையும் எழுப்பினோம். என் போன்றோரின் உன்னத உழைப்பிலும், வியர்வையிலும் கட்டிட நிதி சிறுக சிறுகச் சேர்த்து எழுந்து உயர்ந்து கம்பீரமாக நிற்கும் கட்டிடம் சங்கத்தின் சொத்து. நிலமும், கட்டிடமும் சங்கத்தின் பெயரிலேயே பத்திரத்தில் பதிவு செய்யப்பட்ட உண்மை அந்த நண்பருக்குத் தெரிய வாய்ப்பில்லை. யாரிடமாவது கேட்டுத் தெரிந்திருக்கலாம். அதுவும் செய்யாமல், வாய்புளித்ததோ, மாங்காய்ப் புளித்ததோ என்று சரடு விடுவது அழகல்ல.

**பொறியாளர் ஆர்.கே.சுந்தரம்,**
**உதவிச் செயற்பொறியாளர், பொ.ப.து. (ஓய்வு)**

தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை – 5.

வழங்கும்

# பொறியாளர் எஸ். கணபதி பொறியாளர் எஸ். முருகானந்தம் கல்விப் பரிசு திட்டம் – 2013

**10 அல்லது +2 தேறியவர்களுக்கு மட்டும்**

**விண்ணப்பப்படிவம் (தெளிவாக எழுதவும்)**

1. மாணவர் / மாணவியர் பெயர் ..........................................................................
2. தந்தை / பாதுகாவலரின் பெயர் ..........................................................................
3. உறுப்பினர் எண். ..........................................................................
4. முகவரி ..........................
5. மாணவர் / மாணவி உறுப்பினருக்கு உறவுமுறை.......................
6. 10 அல்லது +2–ம் வகுப்பு தேர்வில் மொத்த மதிப்பெண்கள் (நகல் இணைக்கப்பட வேண்டும்)...........
7. 10 அல்லது +2–ம் வகுப்பில் சேர்ந்த ஆண்டு மாதமும்................
8. 10 அல்லது +2–ம் வகுப்பில் தேர்வில் வெற்றி பெற்ற மாதம் ஆண்டு

முதல் முயற்சியிலேயே தேர்வு பெற்றவரா ? ஆம்/இல்லை................

சங்க உறுப்பினர் கையொப்பம் மாணவ / மாணவி கையொப்பம்

<u>**சான்றிதழ்**</u>

பொறியாளர்.................................................கிளைச் சங்கத்தின் ஆயுள் கால உறுப்பினர் எண்.................... / சாதாரண உறுப்பினர் எண்............................................தொடர்ந்து 2011, 2012 மற்றும் 2013ம் ஆண்டில் உறுப்பினர் கட்டணம் / சிறப்பு நன்கொடை செலுத்தி உறுப்பினராக இருந்துள்ளார். மேற்படி உறுப்பினரின் மகன் / மகள் / சகோதரர் / சகோதரி 2013–ம் வருடம் மார்ச்சில் நடைபெற்ற 10 அல்லது +2 வகுப்பு தேர்வில் முதல் முறையிலேயே...............................மதிப்பெண்களை பெற்று தேர்ச்சி பெற்றுள்ளார் என சான்றளிக்கிறோம்.

| உறுப்பினர் தொகை | இரசீது எண் | தேதி |
|---|---|---|
| 2011............................... | ............................. | .................... |
| 2012............................... | ............................. | .................... |
| 2013............................... | ............................. | .................... |

(உரிய விபரங்களை சரி பார்த்துக் கிளைச் செயலாளர் சான்றிதழ் அளித்தல் வேண்டும்)

செயலாளர்..........................................................கிளை

<u>**தலைமைச் சங்கம்**</u>

மாணவர் / மாணவியின் பெயர் ..........................................................................

சங்க உறுப்பினர் பெயர் ..........................................................................

உறவு முறை ..........................................................................

2013ம் வருட மார்ச்சில் நடைபெற்ற 10 அல்லது +2 வகுப்புத் தேர்வில் மதிப்பெண்கள் பெற்று..........................................................பரிசாக ரூ...........................பெறுகிறார்.

பொதுச் செயலாளர் தலைவர்

## தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை – 5.

## பொறியாளர் எஸ். கணபதி பொறியாளர் எஸ். முருகானந்தம்

## கல்விப் பரிசு திட்டம் – 2013

**(10ம் வகுப்புக்கும், +2 வகுப்புக்கும் தனித் தனியாக)**

- **முதல் பரிசு ரூ. 2000/– வீதம்**
- **இரண்டாம் பரிசு ரூ. 1500/– வீதம்**
- **மூன்றாம் பரிசு ரூ. 1000/– வீதம்**

**திட்டம்:**

நமது சங்கத்தின் முன்னாள் மூத்தத் தலைவர்கள் பொறியாளர் எஸ். கணபதி மற்றும் பொறியாளர் எஸ். முருகானந்தம் ஆகியோர் சங்கத்திற்கு ஆற்றிய அருந்தொண்டினைப் பாராட்டி பெருமைப்படுத்தும் வகையில் 1976 மற்றும் 1980–ம் ஆண்டு முதல் இத்திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

இச்சங்க உறுப்பினர்களின் குழந்தைகள் மற்றும் அவரை சார்ந்த சகோதர / சகோதரிகளின் கல்வி நலனுக்காகவும் அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு இத்திட்டம் உருவாக்கப்பட்டது.

2013–ம் வருடம் மார்ச் மற்றும் ஏப்ரல் திங்களில் தமிழ்நாட்டில் நடைபெற்ற 10–ம் வகுப்பு மற்றும் +2 வகுப்புத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்ற சங்க உறுப்பினர்களை சார்ந்த கல்வி கற்கும் ஒருவருக்கு முதல் பரிசாக ரூ. 2000/– (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) இரண்டாம் பரிசாக ரூ. 1500/– (ரூபாய் ஒரு ஆயிரத்து ஐநூறு மட்டும்) மூன்றாம் பரிசாக ரூ. 1000/– (ரூபாய் ஒரு ஆயிரம் மட்டும்) வீதம் இந்த இரு கல்விப் பரிசு திட்டங்களுக்கும் தனித்தனியாக வழங்கப்படும். பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் பரிசுக்குரியவர்கள் நிர்ணயிக்கப்படுவர்.

**தகுதி, கலந்து கொள்ளும் முறை மற்றும் விதிகள்:**

1. 10ம் வகுப்பு அல்லது +2 வகுப்புகளில் முதல் தடவையிலேயே தேர்வு பெற்றவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

2. தகுதியுடையோர் விண்ணப்பத்தினை, அதற்கென முன் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தை பூர்த்தி செய்து மூடி முத்திரையிட்டு கவரின் மேல் கல்விப் பரிசுத் திட்டம் பெயரைக் குறிப்பிட்டு தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொ.ப.து. சேப்பாக்கம், சென்னை–5 என்ற முகவரியிட்டு ரூ. 15 கிளையில் செலுத்தி உரிய ரசீதினை இணைத்து அனுப்ப வேண்டும்.

3. மதிப்பெண் பட்டியல் நகல் ஒன்று கிளைச் சங்க செயலரால் மூல மதிப்பெண் பட்டியலுடன் ஒப்பிடப்பட்டு, சான்றிடப்பட்டு இணைத்து அனுப்ப வேண்டும்.

4. மேற்கூரிய வண்ணம் முழுமையாக நிரப்பப் பெற்ற படிவம் 31.07.2013–க்குள் மூடி முத்திரையிட்ட (Sealed) உறையில் சென்னையிலுள்ள தலைமைச் சங்கத்திற்கு நேரடியாக வந்து சேர வேண்டும். 31.07.2013க்குப் பின் பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

5. விண்ணப்பதாரரின் பெற்றோர் / பாதுகாவலர் இச்சங்கத்தில் தொடர்ந்து 2011, 2012 மற்றும் 2013 ஆண்டுகளில் உறுப்பினராக சந்தா செலுத்திய இரசீதுகளின் எண்கள் பற்றி விவரத்தினை கிளைச் செயலாளர் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். ஆயுள் உறுப்பினராக இருப்பின் செலுத்திய சிறப்பு நன்கொடை அதற்கான விவரங்களும் தெரிவிக்கப்பட வேண்டும். மேற்படி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்புகின்ற முழு பொறுப்பு உறுப்பினர்களையே சாரும். குறிப்புகள் முழுமையாக விண்ணப்பத்தில் பூர்த்தி செய்யப் படாவிட்டால் அந்த விண்ணப்பம் தொடர்பாக கிளைச் சங்க பொறுப்பாளர்களையோ அல்லது அந்த உறுப்பினர்களிடமிருந்தோ எந்த விளக்கமும் பெறாமலேயே நேரிடையாக நிராகரிக்கப்படும் என்பதையும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

6. விண்ணப்பத்துடன் மாணவ / மாணவியரின் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் இணைத்து அனுப்புதல் வரவேற்கத் தகுந்தது மட்டுமல்ல, மிக அவசியமானது கூட, பரிசு பெறுவோரின் புகைப்படங்கள் பின்னர் கதிரில் வெளியிடப்படும்.

**தமிழ்நாடு பொறியியல் சங்கம்**

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் வேலூர் கிளையின் உறுப்பினர் பொறியாளர் P.B.மோகன் கண்காணிப்புப் பொறியாளர் அவர்கள் பதவி உயர்வுக்காக ரூ.5,001 (ரூபாய் ஐயாயிரத்து ஒன்று) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் காஞ்சிபுரம் கிளையின் செயலாளர் பொறியாளர் P.கருணாநிதி உதவிச் செயற்பொறியாளர் அவர்கள் பதவி உயர்வுக்காக ரூ.5,000 (ரூபாய் ஐயாயிரம்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளையின் உறுப்பினர் பொறியாளர் S.பாண்டியன் இளநிலைப் பொறியாளர் அவர்கள் வழக்கு நிதிக்காக ரூ.3,000 (ரூபாய் மூவாயிரம்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளையின் உறுப்பினர் பொறியாளர் M.சிவராமன் இளநிலைப் பொறியாளர் அவர்கள் வழக்கு நிதிக்காக ரூ.2,000 (ரூபாய் இரண்டாயிரம்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தர்மபுரி கிளையின் உறுப்பினர் பொறியாளர் U.நகுலன் உதவிச் செயற்பொறியாளர் அவர்கள் மகள் திருமணத்திற்காக ரூ.2,000 (ரூபாய் இரண்டாயிரம்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளையின் உறுப்பினர் பொறியாளர் A.ராஜேந்திரன் இளநிலைப் பொறியாளர் அவர்கள் மகன் திருமணத்திற்காக ரூ.1,000 (ரூபாய் ஆயிரம்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருநெல்வேலி-தூத்துக்குடி கிளையின் உறுப்பினர் பொறியாளர் S.சிவராஜன் இளநிலைப் பொறியாளர் அவர்கள் மகள் திருமணத்திற்காக ரூ.500 (ரூபாய் ஐநூறு) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளையின் உறுப்பினர் பொறியாளர் M.சம்பத்குமார் உதவிப் பொறியாளர் (மின்) அவர்கள் சங்க வளர்ச்சி நிதிக்காக ரூ.500 (ரூபாய் ஐநூறு) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

---

## இரங்கல் செய்தி

தமிழ்நாடு பொறியியல் சங்கம் காஞ்சிபுரம் கிளையின் உறுப்பினர் பொறியாளர் R.சுந்தரவரதன் இளநிலைப் பொறியாளர் (ஓய்வு) அவர்கள் 11.05.2013 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருநெல்வேலி-தூத்துக்குடி கிளையின் உறுப்பினர் பொறியாளர் K.ஆதிமூலம் உதவிப் பொறியாளர் அவர்களின் மாமியார் திருமதி.M.ஜெயலெஷ்மி அவர்கள் 16.05.2013 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருநெல்வேலி-தூத்துக்குடி கிளையின் உறுப்பினர் பொறியாளர் V.ராமகிருஷ்ணன் இளநிலைப் பொறியாளர் அவர்களின் மாமனார் திரு.S.சுப்பிரமணியன் அவர்கள் 10.04.2013 அன்று இயற்கை எய்தினார்.

இழப்பால் வாடும் இதயங்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

# இணைத் தலைமைப் பொறியாளர் பொறியாளர் பொ.பா.மோகன் அவர்களுக்கு பாராட்டு விழா

பகுதி நேரப் பொறியியல் பட்டப்படிப்பு படித்து பொதுப்பணித்துறையில் இரண்டாவது கண்காணிப்புப் பொறியாளராகப் பதவி உயர்வு பெற்ற சேலத்தை சார்ந்த பொறிஞர் பொ.பா.மோகன் அவர்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளையும், தமிழ்நாடு டிப்ளமாப் பொறியாளர் பேரவை சேலம் கிளையும் இணைந்து 27.04.2013 சனிக்கிழமை காலை 11.30 மணி அளவில் பொறியியல் சங்க சேலம் கிளையின் தலைவர் பொறிஞர் எஸ்.ஆறுமுகம் அவர்கள் தலைமையில் சேலத்தில் பொறிஞர் டி.ஜானகிராமன் இல்லத்தில் முதல் மாடியில் உள்ள பொறிஞர் சி.சண்முகப் பெருமாள் அரங்கில் நடைபெற்றது. பொறிஞர் பொ.பா.மோகன் அவர்களின் பணி, சங்கத்திற்கு செய்த உதவிகள் போன்றவற்றுடன் அவருக்கு கண்காணிப்புப் பொறியாளர் பதவி கிடைத்ததைப் பொறிஞர் என்.எஸ்.கௌரி சங்கர் மாநிலத் தலைவர் தமிழ்நாடு பொறியியல் சங்கம் அவர்கள் பாராட்டி பேசினார்.

தியாகச் செம்மல் பொறிஞர் சி.ப.சண்முகம் அவர்கள் பொறிஞர் பொ.பா.மோகன் அவர்களுடன் 1978 முதல் ஏற்பட்ட நட்பினை விளக்கிக்கூறி தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக நடத்திட தக்க உதவிகள் வழங்கிட கேட்டுக் கொண்டார். பொறிஞர் என்.சீனிவாசன் பள்ளி தொழில் நுட்பக் கல்வி ஆசிரியர் அவர்கள் தனது உரையில் சேலத்தில் உள்ள பாலபாரதி மேல்நிலைப் பள்ளியில் தன்னுடைய பொறியியல் பிரிவில் படித்த மாணவர், உயர்ந்த பதவிக்கு வந்தது தனக்கு எல்லையில்லாத மகிழ்ச்சியை அளித்துள்ளது என்று கூறி பொறிஞர் பொ.பா.மோகன் எல்லா நலன்களும் பெற்று வளமுடன் வளமுடன் வாழ்க என வாழ்த்தினார். கவிதாயிணி திருமதி முல்லை மாணிக்கம் அவர்கள் பொறிஞர் பொ.பா.மோகன் அவர்களைப் பாராட்டி கவிதை எழுதி அதை இசைபட பாடி மகிழ்வித்தார்.

பொறிஞர் ஏ.நடராஜன் மாநில நிதிச் செயலாளர் தமிழ்நாடு பொறியியல் சங்கம் அவர்கள், பொதுப்பணித்துறையில் பகுதி நேரப் பொறியியல் பட்டப் படிப்பு படித்து கண்காணிப்புப் பொறியாளராகப் பதவி உயர்வு பெற்ற முதல் பொறிஞர் ஆர்.பழனிசாமி என்பதுடன் அவரைத் தொடர்ந்து பொறிஞர் பொ.பா.மோகன் பதவி உயர்வு பெற்று சாதனை செய்துள்ளார் என்று பாராட்டினார்.

தமிழ்நாடு வரைவு அலுவலர் சங்கத்தைச் சார்ந்த பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் திரளாக வந்திருந்து பொறிஞர் பொ.பா.மோகன் அவர்களுக்கு சிறப்பு செய்து பாராட்டினர். பொறிஞர் தி.உதயகுமார் மேற்கு மண்டலச் செயலாளர் தமிழ்நாடு பொறியியல் சங்கம் அவர்கள் தனது உரையில் வரைவாளராக அரசுப் பணியில் சேர்ந்து, கண்காணிப்புப் பொறியாளராகப் பதவி உயர்வு பெற்ற பொறிஞர் பொ.பா.மோகன் அவர்களைப் பாராட்டினார்.

பொறிஞர் சி.இராமசாமி செயற்பொறியாளர் பொ.ப.து. (ப.நி) மற்றும் மலர் வெளியீட்டுக் குழுத் தலைவர் தனது உரையில் தானும் முதலில் வரைவாளராகப் பணியில் சேர்ந்து பகுதி நேரப் பொறியியல் படித்ததினால் செயற்பொறியாளராகப் பதவி உயர்வு பெற்றதையும், அதையும் தாண்டி சேலத்தைச் சார்ந்தவர் கண்காணிப்புப் பொறியாளராகப்

பதவி உயர்வு பெற்றது ஒரு சரித்திர சாதனை என்றார். தமிழ்நாடு ஓய்வு பெற்ற பட்டயப் பொறியாளர் பெருமன்றம் சேலம் கிளையின் தலைவர் பொறிஞர் வி.என்.சாம்பசிவம் அவர்கள் பொறிஞர் பொ.பா.மோகன் அவர்களைப் பாராட்டி பேசியதுடன் பணிநிறைவிற்குப் பின் சேலம் பெருமன்றத்தில் இணைந்து தொண்டாற்ற வருமாறு அழைத்தார். பொறிஞர் எம்.காவேரிகவுண்டர் செயற்பொறியாளா பொ.ப.து. (ப.நி) அவர்கள் தனது உரையில் எல்லா வகையிலும் பொறிஞர் பொ.பா.மோகன் சிறப்பானவர் என்றும், அமைதியாக இருந்து கடமை ஆற்றுபவர் என்றார்.

பொறிஞர் டி.தியாகராஜன், உதவிச் செயற்பொறியாளர் மற்றும் பெருமன்ற கிருஷ்ணகிரி மாவட்ட பிரதிநிதி அவர்கள் தனது உரையில் பொறிஞர் பொ.பா.மோகன் தொழில் நுட்ப உதவியாளராகப் பணி செய்த காலத்திலேயே கடமை உணர்வுடன் பணியாற்றி, தொழில் பக்தியுடன் பணி செய்தவர் என்று பாராட்டினார். பொறிஞர் எஸ்.ஆர்.சுப்ரமணியம், தமிழ்நாடு பொறியியல் சங்கம் தருமபுரி கிளையின் செயலாளர் அவர்கள் தனது உரையில் பொ.பா.மோகன் அவர்கள் வரட்டாறு நீர்த்தேக்கத் திட்டத்தில் பணி செய்த பொழுது தருமபுரி கிளைக்கு செய்த உதவிகளை பட்டியலிட்டார். கவிஞர் பொறிஞர் பூங்கா மாணிக்கம் (மலேசியா) அவர்கள் ஒரு அழகான கவிதை எழுதி பாராட்டு தெரிவித்தார்.

சிறப்பு நிகழ்ச்சியாக சேலத்தில் உள்ள என்.எஸ்.இயற்கை மற்றும் மருத்துவமனையின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ்.கே.செந்தில்ராஜன் அவர்கள், உடல்நலம் காக்க தேவைப்படும் உடற்பயிற்சி, யோகா, சத்துள்ள சரிவிகித உணவு தியானம் போன்றவைகள் பற்றி விரிவுரையாற்றினார். பார்வையாளர்கள் கேட்ட ஐயங்களுக்கு தெளிவுரை வழங்கினார். சமீபத்தில் வெளியிட்ட "மருந்தில்லா மருத்துவம்" என்ற ரூ.150/- விலையுள்ள நூலை, சிறப்பு தள்ளுபடி ரூ.25/- வழங்கி ரூ.125/-க்கு வழங்கினார். பலர் பெற்று பயனடைந்தனர்.

பொறிஞர் ம.பலராமன், பேரவைத் தலைவர் சேலம் கிளை அவர்கள் தமிழ்நாடு பொறியியல் சங்கமும் பேரவையும் இணைந்து முயற்சி செய்த பொழுது சிலம்புச் செல்வர் போன்ற மாமனிதர்களின் உதவியினால் பகுதி நேரப் பொறியியல் பட்டப் படிப்பு கிடைத்ததினால் தான் இந்த அளவிற்கு உயர முடிந்ததை நெஞ்சில் நினைத்து ம.பொ.சி. இல்லத்திற்கு பொறிஞர் பொ.பா.மோகன் ரூ.5001/-ஐ நன்கொடையாக கொடுத்தற்கு நன்றி கூறினார்.

இறுதியாக பொறிஞர் பொ.பா.மோகன் தனது ஏற்புரையில் தான் இந்த அளவிற்கு காரணமான, பெற்றோர், ஆசிரியர்கள், சங்கங்கள் தான் காரணம் என்றும் இந்த அளவு தனக்கு பாராட்டு விழா நடத்தியமைக்கு தனது நெஞ்சார்ந்த நன்றியினைக் கூறினார். விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் டாக்டர் எம்.உதயமூர்த்தி அவர்கள் எழுதிய எண்ணங்கள் என்ற நூலின் பிரதியை தனது சொந்த செலவில் நினைவுப் பரிசாக வழங்கினார்.

பொறிஞர் ஆர்.வேதநாராயணன் செயலாளர் தமிழ்நாடு பொறியியில் சங்கம் சேலம் கிளை அவர்கள் தனது நன்றியுரையில் இவ்வாறு விழா நடத்த வேண்டும் என்று வித்திட்டவர் பொறிஞர் ம.பலராமன் என்றும் அவருடன் பெருமன்றம் மற்றும் பேரவையின் பொறுப்பாளர்கள் அயராது பாடுபட்டு அழைப்பிதழ், சிறப்பு அழைப்பாளர், சிறப்பான உணவு ஏற்பாடு செய்தமைக்கு, விழாவில் பங்கேற்க இசைந்த அனைவருக்கும் நன்றி கூறினார். தேசீய கீதத்துடன் விழா இனிதே நிறைவுற்றது.

**IN THE SUPREME COURT OF INDIA**
**CIVIL APPELLATE JURISIDCTION**
**CIVIL APPEAL NO.1115 OF 2013**
(Arising out of SLP (C) No.2118 of 2011)

G.Muthuraj ... Appellant

Versus

State of Tamil Nadu and another ... Respondent (s)

With

CIVIL APPEAL NO.1116 OF 2013
(Arising out of SLP (C) No.15190 of 2011)

**O R D E R**

Leave granted.

The questions which arise for consideration in these appeals are whether as a sequel to quashing of the order of punishment by the learned Single Judge, the appellant became entitled to be promoted to the higher post from the date persons junior to him were promoted and whether the Division Bench of the High Court was justified in declaring that he shall not be entitled to claim notional promotion or promotional benefits.

The appelant joined service as Assistant Engineer in the Public Works Department of the Government of Tamil Nadu in 1982. A departmental inquiry was initiated gainst him vide Memo dated 06.07.1993 on the charge that he was responsible for shortage of material. At the conclusion of the inquiry, the Disciplinary Authority passed order dated 03.10.1994 and directed that Rs.1,52,941/- be recovered from the appellant. That order was set aside by the Tamil Nadu Administrative Tribunal (for short, 'the Tribunal') vide order dated 27.10.1994 but gave liberty to the competent authority to pass appropriate order in accordance with law. After about six years, the appellant was served with Memo dated 31.07.2000 for holding an inquiry on the same charge under Rule 17(b) of the Tamil Nadu Civil Services (Disciplinary and Appeal) Rules. After considering the inquiry report, the Disciplinary Authority passed order dated 11.06.2004 for recovery of Rs.1,52,941/- in 74 monthly installments and also imposed the penalty of stoppage of an increment for six months without cumulative effect.

During the pendency of the departmental proceedings, the State Government promoted 59 Assistant Engineers, including those who were junior to the appellant, to the posts of Executive Engineers. The appellant was denied promotion on account of pendency of the departmental proceedings. The representation made by him for promotion to the next higher post was rejected vide letter dated 21.02.2005 on the ground that the punishment imposed vide order dated 11.06.2004 would remain operative till 31.07.2010, i.e., the date of his superannuation.

Writ Petition Nos.10600 and 10601 of 2005 filed by the appellant questioning the order of punishment and rejection of his representation were allowed by the learned Single Judge primarily on the ground of unexplained delay of about six years in re-initiation of the departmental inquiry.

The respondents did not challenge the annulment of communication dated 21.02.2005 vide which the appellant's representation for promotion to the post of Executive Engineer was rejected, but filed Writ Appeal No.1204/2010 and questioned that part of the order of the learned

Single Judge whereby he quashed the order of punishment. The Division Bench of the High Court took congnizance of the fact that the second charge memo was issued after long delay of almost 7 years and on account of pendency of the departmental proceedings, the appelant had been deprived of promotion to the next higher post and dismissed the appeal subject to the rider that the appellant shall not be entitled to claim notional promotion or promotional benefits. This is evinced from the operative protion of order dated 07.07.2010 of the Division Bench, which reads as under:

"Taking into consideration all these facts, we are of the view that the learned Single Judge rightly quashed the order of punishment in a departmental proceedings, which was concluded in about 15 years. The impugned order passed by the learned Single Judge, therefore, needs no interference by this court. However, it is made clear that since the order of punishment has been quashed only on the ground of delay, the respondent shall not be entitled to claim any notional promotion or promotional benefits, save and except his claim of retiral benefits on attaining the age of superannuation. It is also made clear that if any part of the amount has already been recovered, no further amount shal be recovered from the respondent."

The appellant sought review of the aforesaid order by contending that once the Division Bench approved the declaration of invalidity granted by the learned Single Judge quashed the order of punishment, there was no justification to deprive him of his legitimate right to be promoted to the higher post. The Division Bench referred to Order 41 Rule 33 the Code of Civil Procedure, judgements of this Court in Mahant Dhangir V.Madan Mohan (1987) Supp. SCC 528, K.Muthuswami Gounder v. N.Palaniappa Gounder (1998) 7 SCC 327 and State of Punjab v. Bakshish Singh (1998) 8 SCC 222and held that the direction contained in order dated 07.07.2010 does not suffer from any error apparent warranting its review.

Ms.Anitha Shenoy, learned counsel for the appellant argued that with the quashing of the order of punishment, the appellant became entitled to be considered for promotion with effect from the date persons junior to him were promoted as Executive Engineers and the Division Bench of the High Court was not at all justified in declaring that he shall not be entitled to notional promotion or promotional benefits. Learned counsel emphasized that the appellant had been denied promotion to the post of Executive Engineer solely on the ground fo pendency of the departmental proceedings and argued that once those proceedings and the final order were declared illegal and quashed, there remains no impediment in the appellant's promotion with effect from the date his junior(s) were promoted because his service record is otherwise unblemished.

Shri S.Guru Krishna Kumar supported the direction given by the Division Bench of the High Court and argued that the appellant is not entitled to be promoted to the post of Executive Engineer because the departmental proceedings were quashed only on the ground of delay and not on merits. He further argued that even if the direction given by the Division Bench for non-consideration of the appellant's case for notional promotion is found to be legally untenable, this Court may not direct his promotion to the higher post because the criteria for promotion is seniority-cum-merit. He argued that after exoneration in the departmental proceedings or acquittal in a criminal case the concerned government servant can at the best seek consideration of his case for promotion at the Court cannot issue direction for promotion of such an employee. In support of this argument, Shri S.Guru Krishna Kumar relied upon the judgment of this Court in State of Mysore V. C.R.Sheshadri (1974) 4 SCC 308. He, however, did not controvert the statement of Ms. Shenoy that the service record of the appellant is otherwise unblemished.

We have considered the respective submissions and scrutinized the record. It is not in dispute that the departmental proceedings were re-initiated against the appellant after more than 6 years of the Tribunal's order vide which liberty was given to the respondents to pass fresh order in accordance with law. Therefore, the learned Single Judge of the High Court rightly quashed the order of punishment passed on 11.06.2004. The respondents did file appeal but could not convince the Division Dench to overturn the order of the learned Single Judge.

The pleadings of the parties show that the appellant had been denied promotion to the psot of Executive Engineer only on account of pendency of the departmental proceedings. Indeed, it is neither the pleaded case of the respondents nor any material has been placed before this Court to show that he was passed over/superseded on account of adverse remarks recorded in the annual confidential records or any other adversity in the service record. Therefore, once the order of punishment was quashed by the learned Single Judge, the appellant automatically became entitled to be considered for promotion with effect from the date persons junior to him were promoted to the post of Executive Engineer. However, that right of the appellant has been stultified by the direction contained in the impugned judgment which, in our view, is legally unsustainable because the Division Bench has not assigned any reason for directing that the appellant shall not be entitled to notional promotion or promotional benefits.

In Sulekh Chand and Salek Chand v. Commissioner of Police 1994 Supp (3) 674, this Court held that after his acquittal in the criminal case filed under the Prevention of Corruption Act the employee was entitled to be promoted with effect from the date his juniors were promoted because the factor which was responsible for his non-promotion had become non-existent.

In State of Mysore v. C.R.Sheshadri (1974) 4 SCC 308, this Court did not approve of the direction given by the High Court for promotion of the respondent from the post of Assistant Secretary to that of Deputy Secretary but refused to interfere with the High Court's order by making the following observations:

"The length of this litigation has really disappointed the petitioner by denying him the enjoyment of likely promotion. He retired the day before the judgement of the High Court. No one in service would be affected by the allowance of the petitioner's claim and what was a service issue has now been reduced to one of money payment. A retired government official is sensitive to delay in drawing monetary benefits. And to avoid posthumous satisfaction of the pecuniary expectation of the superannuated public servant not unusual in government - we direct the appellant to consider promptly the claim of the petitioner in the light of our directions and make payment of what is his due - if so found - on or before April 15, 1974. The Government's inexplicable indifference in not placing before the Court the relevant rule regarding promotion to the post of Deputy Secretary merits the order that the appellant pay the costs of the petitioner / first respondent, for the wages of winner's sloth is denial of costs, and something more."

In B.V.Sivaiah v. K.Addanki Babu (1998) 6 SCC 720, the three Judge Bench explained the criteria of 'seniority-cum-merit' in the following words:

"While applying the principle of seniority-cum-merit fot the purpose of promotion, what is required to be considered is the inter se-seniority of the employees who are eligible for consideration. Such seniority is normally determined on the basis of length of service, it is generally determined on the basis of placement in the select list for appointment. Such determinationof seniority confers certain rights and the principle of seniority-cum-merit gives effect to such rights flowing from seniority. It cannot, therefore, be said that in the matter of promotion on the basis of seniority-cum-merit, seniority has no role where the employees eligible for promotion were appointed on the same date and have the same length of service."

In view of the propositions laid down in the aforementioned judgements, we hold that the Division Bench of the High Court committed an error be directing that the appellant shall nto be entitled to notional promotion or promotional benefits.

The dismissal of the review petition filed by the appellant is also unsustainable because the Division Bench had erroneously invoked Order 41 Rule 33 CPC to justify the direction given by it on the issue of the appellant's right to be considered for promotion to the next higher post.

In the result, the appeal are allowed, the impugned orders are set aside and the respondents are directed to consider the appellant's case for promotion to the post of Executive Engineer from date his juniors were promoted. This exercise shall be completed by the concerned authorities within three months from today. If the appellant is found suitable for promotion as per the criteria applied in the cases of his juniors, then he shall be given promotion from the date his juniors were promoted as Executive Engineers and be given all consequential benefits including retiral benefits.

| | | |
|---|---|---|
| NEW DELHI | Sd/- xx xx xx | Sd/- xx xx xx |
| FEBRUARY 8, 2013 | (G.S.SINGHVI).....j. | (DIPAK MISRA) ........j. |

---

## பணி ஓய்வு பெற்றவர்கள்

(அரசாணை (வாலாயம்) எண்.268 பொதுப்பணி(எப்1)த்துறை நாள் 31.05.2013)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | M.A. செல்வநாதன் | தலைமைப் பொறியாளர் |
| 2. | S. சிவபெருமான் | சிறப்பு தலைமைப் பொறியாளர் |
| 3. | கிருஷ்ணமூர்த்தி சுகுமார் | இணைத் தலைமைப் பொறியாளர் |
| 4. | K. திருப்பதி | கண்காணிப்புப் பொறியாளர் |
| 5. | N. மனோகரன் | கண்காணிப்புப் பொறியாளர் |
| 6. | P.B. மோகன் | கண்காணிப்புப் பொறியாளர்/ இணைத் தலைமைப் பொறியாளர் |
| 7. | P. சூப்பிரண்ட் | செயற்பொறியாளர் |
| 8. | P. பூமாலை | செயற்பொறியாளர் |
| 9. | P. தமிழ்செல்வன் | செயற்பொறியாளர் |
| 10. | K. லோகநாதன் | செயற்பொறியாளர் |
| 11. | V. ராதாகிருஷ்ணன் | மின் பொறியாளர் |
| 12. | N. சிவக்கொழுந்து | உதவிச் செயற்பொறியாளர் |
| 13. | V. சுந்தரபாண்டியன் | உதவிச் செயற்பொறியாளர் |
| 14. | R. சுந்தரராமன் | தலைமை வரைதொழில் அலுவலர் |
| 15. | V. மனோகரராஜ் | இணை இயக்குநர் (புவியியல்) |

(ஆளுநரின் ஆணைப்படி)

**எம். சாய்குமார்**
அரசுச் செயலாளர்

## சொல்வதெல்லாம் பொய். பொய்யை தவிர வேறு இல்லை

மே 2013 பெருமன்ற செய்தி மடலை பார்க்கும் போது இப்படித் தான் சொல்ல தோன்றுகிறது. மிகவும் தரம் தாழ்ந்து, அநாகரீகமாக, பொய்யாக முதல் பக்கம் முதல் கடைசி பக்கம் வரை எழுதியிருக்கிறார்கள். யாராவது TNEA-விற்கு எதிராக மூச்சு விட்டால் கூட எத்தனை முறை விட்டார்கள் என்பதை கூட எழுதுவார்கள் போல தெரிகிறது. இதிலிருந்தே FORDET பொறுப்பாளர்களின் "தரம்" என்னவென்று தெரிகிறது. பொறியியல் கதிரில் இதுபோன்ற விஷயங்களை எழுதக் கூடாது. அது அநாகரீகம் என்று கருதினாலும் எழுத வேண்டிய கட்டாயத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.

எல்லாவற்றிற்கும் பதில் அளித்தால் ஒரு புத்தகமே போடலாம். ஆனால் அதற்கான நேரம் இல்லாததாலும், நாகரீகம் கருதியும் சுருக்கமாக பதில் அளிக்கிறேன்.

ஒருவர் "TNEA கட்டிடம் கட்டுவதற்கு சிமெண்ட் நன்கொடையாக கொடுத்தேன். பொறியாளர் சி.ப.சண்முகம் எவ்வளவு கொடுத்தார்? சொல்வாரா? பெயர் வைத்து விட்டால் அது அவர் சொந்தக் கட்டிடமா?" என்று கேட்டதாக எழுதியிருக்கிறார்கள்.

பொறியாளர் சி.ப.சண்முகம் என்ன கொடுத்தார்? உயிரை கொடுத்தார்? சங்கத்திற்காக உயிரை கொடுக்க முன் வந்தார். தியாகங்கள் செய்தார். உயிரை விட சிமெண்ட் பெரிதில்லை என்பதால்தான் சிமெண்ட் கொடுத்தவரின் பெயரை வைக்காமல் திரு.சி.ப.சண்முகம் அவர்களின் பெயரை அரங்கிற்கு வைத்திருக்கிறார்கள்.

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் சில மூத்தப் பொறியாளர்களை "கோடாரிகாம்புகள்" என்று திரு.டி.வி.கோமதிநாயகம் அவர்கள் எழுதியிருக்கிறார். தவறு செய்த நான்கு பேர் மீது நடவடிக்கை எடுத்ததற்கு அதை பொதுப் பிரச்சினையாக்கி நரி தன் வால் வெட்டுப் பட்டதற்காக எல்லா நரிகளின் வாலையும் வெட்டிவிடும் கதையை போல, FORDET-ல் உள்ள எல்லோரையும், TNEA கட்டிடங்களில் இருந்து வெளியேற்ற முயற்சி செய்து FORDET-ல் உள்ள அனைவருக்கும் கஷ்டம் ஏற்படுத்தி தங்கள் சுயநலத்திற்காக நயவஞ்சகமாக FORDET-ஐ TNEA-விற்கு எதிராக செயல்பட வைக்க முயற்சிகள், அதன் மூலம் TNEA நூற்றாண்டு விழாவிற்கு இடைஞ்சல்கள் ஏற்படுத்த முயற்சிகள் செய்பவர்கள் கோடாரிகாம்புகளா? அல்லது TNEA மூத்தப் பொறியாளர்கள் கோடாரிகாம்புகளா? திரு.டி.வி.கோமதிநாயகம் அவர்கள் கோடாரிகாம்புகள் என்று சொல்பவர்களை இவர் பணிபுரிந்த மாநகராட்சி சங்கத்தின் விழாக்களுக்கு சிறப்பு அழைப்பாளர்களாக அழைத்து கௌரவிக்கிறார்கள். ஆனால் திரு.டி.வி.கோமதிநாயகம் அவர்களை அழைப்பதில்லை. யார் கோடாரிகாம்புகள்? பல பேருக்கு முகவரி கொடுத்தது TNEA. சில பேர் DECT-ல் FORDET-ல் AIFODE-ல் பதவி பெற்றது TNEA-வின் பெருந்தன்மையால். ஏறிவந்த ஏணியை எட்டி உதைப்பதைப் போல, தங்களை வளர்த்துவிட்ட TNEA-விற்கு எதிராக TNEA-வின் இலட்சிய விழாவான நூற்றாண்டு விழாவிற்கு எதிராக FORDET-யை செயல்பட வைக்க முயற்சிகள் செய்பவர்கள் கோடாரி காம்புகளா? TNEA மூத்தப் பொறியாளர்கள் கோடாரிகாம்புகளா?

மூத்தப் பொறியாளர்கள் திரு.ஆர்.வெங்கடசுப்பு, திரு.சி.ப.சண்முகம், திரு.எம்.ஊர்க்காவலன் ஆகியோர்களின் தூண்டுதலின் பேரில் தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று "கோயபல்ஸ்"ஐ மிஞ்சும் அளவிற்கு பொய் பிரச்சாரம் செய்து தங்கள் கோஷ்டி சண்டையை இதில் நுழைக்கப் பார்க்கிறார்கள்.

"தொழிற்சங்க உணர்வு அறவே இல்லாத தமிழ்நாடு பொறியியல் சங்க பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன்" என்று திரு.டி.வி.கோமதிநாயகம் எழுதியிருக்கிறார். உண்மைதான். திரு.டி.வி.கோமதிநாயகம் அவர்களை போன்ற தொழிற்சங்க வாதி அல்ல நான். திரு.டி.வி.கோமதிநாயகம் அவர்கள் பொய், புரட்டு, சுயநலம், திரைமறைவு வேலைகள் செய்தல், மலிவான முறையில் சுய விளம்பரம் மற்றும் ஆதரவு தேடுதல் போன்ற சிறப்பான குணங்கள்? அமையப் பெற்ற மிகச் சிறந்த தொழிற்சங்கவாதி.

ஆனால் நேர்மை, துணிச்சல், சுயநலமின்மை, பணத்தாசை இல்லாமை, பதவி ஆசை இல்லாமை போன்ற சாதாரண குணங்கள் அமையப் பெற்ற சாதாரண மனிதன் நான்.

இவர் பல ஆண்டுகள் சங்கப் பணிகள் ஆற்றி வருவதாகவும், தோழர் முருகேசனுக்கு குறைந்த ஆண்டுகள் அனுபவம் என்றும் எழுதியிருக்கிறார். கடந்த 18 ஆண்டுகளாக பட்டயப் பொறியாளர்களுக்காக முழுமையாக முழு நேரம் பணியாற்றி வருகிறேன். எத்தனை ஆண்டுகள் என்பது முக்கியமல்ல. என்ன சாதித்தோம் என்பது தான் முக்கியம். என்ன சாதித்தேன் என்பதை என்னால்

பட்டியலிட முடியும். **விருந்தாளியாக சென்று கூட்டத்தில் நின்றுவிட்டு வருவதெல்லாம் சாதனை அல்ல.** ஒரே நேரத்தில் இரண்டு பதவிகள் வாங்கி வைத்துக் கொண்டு, பதவி மூலம் தனக்கு செல்வாக்கை தேடிக் கொள்பவன் அல்ல நான். சிறப்பான தனி மனித செயல்பாடுகள் மூலம் கிடைத்த தனி மனித செல்வாக்கை சங்கத்திற்கு பயன்படுத்துபவன் நான். AIFODE தென் மண்டலச் செயலாளர் பதவி, DECT பொதுச் செயலாளர் பதவி போன்றவை என் மீது திணிக்கப்பட்ட போதும் வேண்டாமென்று ஒதுங்கி சென்றவன் நான். வயது ஒன்று மட்டும் ஒரு மனிதனின் தகுதியை நிர்ணயிப்பதில்லை.

திரு.டி.வி.கோமதிநாயகம் அவர்களின் தொழிற்சங்க உணர்வுக்கு சில உதாரணங்கள்.

அண்மையில் "DECT மாநிலச் செயற்குழுவில் கலந்துக் கொள்ளாதீர்கள்" என்று எல்லோரையும் வற்புறுத்தி DECT மாநிலச் செயற்குழுவையே முடக்க முயற்சித்தார் திரு.டி.வி.கோமதிநாயகம் அவர்கள். என்னிடமும் தொலைபேசியில் "நீங்களும், நந்தகுமாரும் DECT மாநிலச் செயற்குழுவில் கலந்துக் கொள்ளாதீர்கள்" என்று வற்புறுத்தினார். இவருக்கு ஏதாவது பிரச்சினை என்றால் கூட்டத்தில் கலந்துக் கொண்டு பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சிக்க வேண்டும். அப்படி இவருக்கு பிடிக்கவில்லையென்றால் இவர் மட்டும் போகாமல் இருக்கலாம். ஆனால் யாரையும் போகவிடாமல் தடுத்து DECT மாநிலச் செயற்குழுவை முடக்க முயற்சிப்பது எவ்வளவு பெரிய அராஜகம்?

திரு.டி.வி.கோமதிநாயகம் அவர்கள் பணிபுரிந்தது மாநகராட்சி. மாநகராட்சி சங்கத்தில் நடைபெறும் எந்தக் கூட்டத்திற்கும் விழாவுக்கும் இவரை அழைக்காமல் புறக்கணிக்கப்படுவதாக தகவல். அண்மையில் நடந்த ஒரு விழாவுக்கு கூட தியாகச் செம்மல் சி.ப.சண்முகம் அவர்களை அழைத்து கௌரவித்தார்கள். இவரை அழைக்கவில்லை. இதிலிருந்தே இவர் எவ்வளவு சிறந்த தொழிற்சங்க வாதி என்பது தெரிகிறது.

DECT தேர்தல்களில் தனக்கு வேண்டியவர்கள் வர வேண்டும் என்பதற்காக பல வேலைகளை செய்தல், தனக்கு வேண்டாதவர்கள் பதவிக்கு வந்துவிட்டால் அவர்களுக்கு தொடர்ந்து இடைஞ்சல்கள் ஏற்படுத்துவது, DECT கூட்டங்களில் உள்நோக்கத்தோடு அநாகரீகமாக அராஜகமாக நடந்துக் கொள்வது, கூட்டங்களில் வாய் கூசாமல் பொய் பேசுவது, 29.07.2012 அன்று கோவையில் DECT மாநிலச் செயற்குழுக் கூட்டத்தில் இவர் பொய் பேசி என்னால் உடனடியாக சுட்டிக்காட்டப்பட்டு தான் கூறியது பொய் என்று ஒத்துக் கொண்டார்.

இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

அடுத்து திரு.கே.வி.வெங்கடேசன் 05.01.2013 அன்று நடைபெற்ற TNEA மாநில செயற்குழுக் கூட்ட தீர்மானத்தை பற்றி தவறான தகவல் கூறி விமர்சித்திருக்கிறார். TNEA சேலம் கிளை இரண்டு தரப்புக்கும் கூட்ட அரங்கம் தரக் கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றி TNEA மையச் சங்கத்திற்கு அனுப்பியிருந்தார்கள். அது சம்பந்தமாக 05.01.2013 TNEA மாநிலச் செயற்குழுக் கூட்டத்தில் நான் பேசும் போது "இரண்டு தரப்புக்கும் அரங்கம் தர வேண்டாம்" என்பதற்கு பதிலாக "இரண்டு தரப்பினருக்கும் தரலாம்" என்று நான் என் கருத்தை கூறிக் கொண்டிருக்கும் போதே TNEA மேற்கு மண்டலச் செயலாளர் திரு.டி.உதயகுமார் அவர்கள் இடைமறித்து அரங்கம் தர மாட்டோம் என்று கூறினார். அதற்கு நான் இது என் தனிப்பட்ட கருத்து என்று கூறினேன். ஆனால் TNEA சேலம் கிளை ஏற்றுக் கொள்ளாததால் சேலம் கிளையின் தீர்மானத்திற்கு மாநிலச் செயற்குழு ஒப்புதல் அளித்தது. இதுதான் உண்மையில் நடந்தது. இதை திரு.கே.வி.வெங்கடேசன் திரித்து பொய்யாக எழுதியிருக்கிறார். திரு.கே.வி.வெங்கடேசன் அவர்களின் சங்கம் போன்று 40 பேரை வைத்து நடத்தும் சங்கம் அல்ல TNEA. TNEA பற்றி பேச திரு.கே.வி.வெங்கடேசன் அவர்களுக்கு எந்த விதமான தகுதியும் கிடையாது.

தவறு செய்யும் அரசியல் வாதிகள் மீது நடவடிக்கை எடுத்தால் அவர்கள் ஆதரவாளர்களை வன்முறையில் ஈடுபட வைப்பதை போல திரு.டி.வி.கோமதிநாயகமும், நான்கு மூத்தப் பொறியாளர்கள் கையொப்பமிட்டு TNEA பொறுப்பாளர்களுக்கு எழுதியுள்ள கடிதத்திலும் TNEA, DECT ஆகியவற்றிற்கு கெடுதல் நடக்கும் (கெடுதல் செய்வோம்) என்று மறைமுகமாக மிரட்டல் விடுத்திருக்கிறார்கள். நல்ல வேளை மத்திய அரசை கவிழ்த்துவிடுவோம் என்று மிரட்டல் விடுக்காமல் போனார்களே! அதற்கு பிறகு நடந்த DECT கூட்டத்தில் எந்த துறையும் TNEAவால் நடவடிக்கைக்குள்ளான இந்த நான்கு பேருக்கு ஆதரவாக பேசவில்லை மாறாக இவர்களுக்கு எதிராகத் தான் பேசினார்கள்.

வினை விதைப்பவன் வினை அறுப்பான் என்பார்கள். தற்போது நடவடிக்கைக்குள்ளான தரப்பு தங்கள் எதிர் தரப்புக்கு, அதாவது மூத்தப் பொறியாளர்கள் திரு.ஆர்.வெங்கடசுப்பு, திரு.சி.ப.சண்முகம், திரு.டி.பி.பாலசுப்ரமணியன், திரு.எம்.ஊர்க்காவலன் ஆகியோர் கலந்துக் கொள்ளும் கூட்டத்திற்கு கூட்ட அரங்கம் தரக் கூடாது என்று TNEA-வை வலியுறுத்தி கடிதம் எழுதினார்கள். ஒருவேளை இவர்கள்

சொல்படி நடந்திருந்தால்? தற்போது நடவடிக்கைக்குள்ளான, தமிழ்நாடு பொறியியல் சங்கத்தை சாராதவர்களுக்காக கொடிபிடிக்கும் விரல்விட்டு எண்ணக் கூடிய அளவுக்கு உள்ள நீதிமான்களே மூத்தப் பொறியாளர்கள் திரு.ஆர்.வெங்கடசுப்பு, திரு.சி.ப.சண்முகம், திரு.டி.பி.பாலசுப்ரமணியன், திரு.எம்.ஊர்க்காவலன் ஆகியோர்களுக்கு தடை விதிக்க வலியுறுத்தும் தங்கள் செயல் மட்டும் நியாயமா? ஈகோ, ஈகோ, ஈகோ வெறும் ஈகோ. உங்கள் ஈகோவிற்கு நாங்கள் பலியாக வேண்டுமா? இப்படி தடைவிதிக்கும் ஒரு வழி இருக்கிறது என்று சொல்லி கொடுத்தவர்களே தற்போது தடை விதிப்புக்கு ஆளாகி இருக்கிறார்கள்.

மூத்தப் பொறியாளர் திரு.வி.எஸ்.ஜானகிராமன் அவர்கள் சமாதானம் பேச வந்தார். அவரிடம் "TNEA-விற்கும், DECT-க்கும் FORDET-ஆல் எந்த வித பாதிப்பும் ஏற்படாது" என்று ஒரு கடிதம் வாங்கி கொடுத்தால் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வந்துவிடலாம் என்று நான் கூறினேன். ஆனால் அவர்கள் நாங்கள் கேட்டபடி கடிதம் எழுதி கொடுக்கவில்லை. மாறாக TNEA எடுத்த நடவடிக்கையை குறை கூறுவதை போல் எழுதி கொடுத்தார்கள். மேலே சொன்னபடி ஒரு கடிதம் எழுதி கொடுத்திருந்தால் பிரச்சினை முடிவுக்கு வந்து இருக்கும். ஆனால் அதற்கு அவர்கள் ஈகோ இடம் கொடுக்கவில்லை.

**<u>மூத்தப் பொறியாளர்களுக்கு</u>**

**நான்கு மூத்தப் பொறியாளர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் தொடர்ச்சியாக ஒட்டு மொத்த FORDET-ஐ நாங்கள் தடுத்துவிட்டதை போல பொய் பிரச்சாரம் செய்கிறார்கள். பிரச்சினை என்னவென்று புரியாமல் மற்றவர்களின் உணர்ச்சியை தூண்டுகிற மாதிரி சாணக்யதனமாக "கோயபல்ஸ்"-ஐ மிஞ்சும் அளவுக்கு பொய் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். எதிர் தரப்பு பேச வாய்ப்பு இல்லாததால் இவர்கள் சுயரூபம் நிறைய பேருக்கு தெரியாது. இந்த நான்கு பேர் இனி TNEA கட்டிடங்களில் நுழைவதை அவமானமாக கருதுகிறார்கள். அதனால் ஒட்டு மொத்தமாக குழப்பம் விளைவித்து FORDET-ஐ TNEA கட்டிடங்களில் இயங்காமல் வெளியில் கொண்டு செல்ல சதி செய்கிறார்கள். இதற்கு சில ஈகோயிஸ்டுகள் துணை நிற்கிறார்கள். TNEA மூத்தப் பொறியாளர்களில் விரல்விட்டு எண்ணும் அளவுக்கு ஒரு சிலரை தவிர மீதியுள்ள அனைவரும் TNEA பக்கம் நிற்கிறார்கள். நாகரீகம் கருதி பல விஷயங்களை, குறிப்பாக ஒரு சிலரின் மோசமான இன்னொரு பக்கத்தை வெளிப்படுத்தாமல் இருக்கிறோம்.**

**மூன்று ஆண்டுகளாக மூத்தப் பொறியாளர்கள் விஷயத்தில் இன்று வரை நாங்கள் நடுநிலைமை காத்துவருகிறோம். தற்போது நடவடிக்கைக்குள்ளான தரப்பு TNEA-வை தங்கள் பக்கம் இழுக்க முயற்சி செய்தது. இவர்கள் எதிர் தரப்புக்கு கூட்ட அரங்கம் தரக் கூடாது என்று கடிதம் எழுதி வற்புறுத்தியது. இவை எவற்றுக்கும் TNEA மசியாததால் TNEA, DECT-க்கு எதிரான செயலில் ஈடுபட்டார்கள். இதன் மூலம் இவர்கள் எதிர் தரப்புக்கு கெடுதல் செய்வதாக நினைத்து செயல்பட்டிருக்கிறார்கள். TNEA கட்டிடம் TNEA-விற்கு சொந்தமானவை அல்ல. அரசுக்கு சொந்தமானது என்று சொல்பவர்களை கூட ஆதரிக்கும் அளவுக்கு சிலர் ஈகோ வெறிபிடித்து அலைகிறார்கள்.**

**மூத்தப் பொறியாளர்கள் பிரச்சினையை FORDET-ல் வைத்துக் கொள்ளாமல் TNEA, DECT என்று இவர்கள் அதிகார வரம்பு நீண்டதால் வந்த பிரச்சினை. சில மூத்தப் பொறியாளர்கள் தாங்கள் என்ன சொன்னாலும் இளைஞர்கள் கேட்க வேண்டும் என்று எதிர்பார்த்து அது முடியாமல் போனதால் வந்த எரிச்சல். சம காலத்தில் இருந்த மூத்தப் பொறியாளர்கள் இடையே அப்போது இருந்து வந்த மறைமுக பகை, ஈகோ தற்போது இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கொள்ள முயற்சி செய்கிறார்கள்.**

**TNEA மூத்தப் பொறியாளர்களின் தியாகங்கள் கொச்சைப்படுத்தப்படுகின்றன. தனி மனித தாக்குதல்கள் நடைபெறுகின்றன. உண்மையான TNEA முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள் இந்த நிகழ்வுகளை கண்டு வேதனை அடைந்துள்ளார்கள். எல்லாவற்றையும் எழுத முடியாது. தேவைப்பட்டால் TNEA கூட்டங்களில் விளக்கப்படும். எனவே இவர்களை நம்பாதீர்கள். இவர்கள் சுயரூபம் தெரிய வரும் போது மிகவும் வருத்தப்பட வேண்டியதிருக்கும்.**

**- பொறியாளர் த.முருகேசன்,**
**பொதுச் செயலாளர்.**

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான 1188ம் ஆண்டு விஜய வருடம் ஆனி மாதம் 5-ம் தேதி (19.06.2013) புதன்கிழமை சித்திரை நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் அன்று காலை மணி 9.00க்கு மேல் 10.00க்குள் கடக லக்கனத்தில்

மேலாயூர் நினைவில் வாழும்
ம.சேதுராமலிங்கம் பிள்ளை-நெல்லையம்மாள்
இவர்களின் பேத்தியும்
திரு.சே.சிவராஜன்-சோ.விசாலாட்சி அவர்களின்
மகளுமான திருநிறைச்செல்வி

**சி. ஐஸ்வர்யா, B.E.,**

திருச்செந்தூர்,
தெய்வத்திரு.ப.சுப்பையா பிள்ளை-பார்வதியம்மாள்
இவர்களின் பேரனும்
திரு.சு.சண்முகசுந்தரம்-ச.சாந்தி
அவர்களின் மகனுமான திருநிறைச்செல்வன்

**ச.திருசெந்தில் சுப்பிரமணியம்@ திருசெந்தில், B.E., M.B.A.,**
**(A.N.Z. பேங்க், சிங்கப்பூர்)**

இவர்களது திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு, தென்காசி, **சிவா கல்யாண மஹாலில்** வைத்து நடைபெறும் திருமணத்திற்கும் அதைச் சார்ந்த சகல வைபவங்களுக்கும் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து மணமக்களை வாழ்த்தியருள அன்புடன் வேண்டுகிறோம்.

**தங்கள் அன்புள்ள,**
**Er. சே. சிவராஜன், B.E., M.E.,**
இளநிலைப் பொறியாளர், பொ.ப.து.,
4/45A, தெற்குத் தெரு, கடையம் அஞ்சல்,
நெல்லை மாவட்டம். செல்: 94436 10353

---

## நம்மவர்

தமிழ்நாடு பாலிடெக்னிக்கில் டிப்ளமா சிவில் இன்ஜினியரிங் படித்து, பொதுப்பணித்துறையில் இளநிலைப் பொறியாளராக பணியில் சேர்ந்து பின்பு பகுதி நேர பட்டப் படிப்பு முடித்து, (அவர் முன்னேற்றத்தை சகித்துக் கொள்ள முடியாத ஒரு சில தலைப் பொறியாளர்களால் பணியிலிருந்து வெளி வந்து) வெகு சில காலம் தனியாக தொழில் துவங்கி, அதுவும் வேண்டாமென்று ஒரு அறக்கட்டளை துவங்கினார். இந்த அறக்கட்டளையின் துவக்கமாக ஆரம்பப்பள்ளி, பின்பு உயர் கல்வி என்று விரிவாக்கம் செய்தார். இதில் கிடைத்த அனுபவத்தால் மேன் மேலும் வளர்ச்சியடைந்து C.B.S.E. பள்ளிகள் துவங்கப்பட்டது. இதனுடன் நில்லாமல் பொறியியல் கல்லூரிகள் துவங்கப்பட்டன.

அன்னாரின் ஆர்வம் மேலும் வளர்ந்து தற்சமயம் 500 படுக்கை வசதியுடன் கூடிய மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டு வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது. அன்னாரின் 100க்கும் மேற்பட்ட பள்ளிகள், பொறியியல் கல்லூரிகள் உள்ளது. அவர் வேறுயாறும் இல்லை Er. M.V.முத்துராமலிங்கம் மதுரையைச் சேர்ந்தவர். வாழ்க நீடுழி.

**குறிப்பு:** தகவல் அளித்து உதவியவர்
பொறியாளர் எஸ்.காசிவிஸ்வநாதன்,
உதவிச் செயற்பொறியாளர், பொ.ப.து. (ஓய்வு)
4/264, ஸ்ரீ சக்ரா நகர், ஐயர் பங்களா அருகில், மதுரை - 625 017.

Under Postal Regd No. TN/CH/(C)/358/12-14 & TN/PMG (CCR) WPP No.308/2012-14 **JUNE**
Date of Posting 5th of Every Month. R.N.I. Registration No.R.33590/78. **2013**



பொறியாளர் பொ.பா.மோகன் கண்காணிப்புப் பொறியாளர் அவர்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் மாநிலத் தலைவர் பொறியாளர் என்.எஸ்.கௌரிசங்கர் அவர்கள் பொன்னாடை அணிவித்தார். உடனிருப்பவர்கள் பொறியாளர் டி.உதயகுமார் மேற்கு மண்டலச் செயலாளர், பொறியாளர் பி.சக்திவேல் இணைச் செயலாளர் சேலம் கிளை.

**நமது சங்கத்தின் Website : www. tnengga. org**
**email id : tneapwd@yahoo.co.in**

தந்தி: பொறியாளர்
தொலைபேசி: சங்கம்: 28525786
இல்லம்: 28551993

**பொறியியல் கதிர்**
**PORIYIYAL KADHIR**

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை – 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

**Published on 3.6.2013 Posting on 7.6.2013**
**REGD. NEWS PAPER**
**POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL**
**POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM**

**பெறுநர்**

EDITED BY: **Er. D. MURUGESAN.,** D.C.E., B.Tech., GENERAL SECRETARY, T.N.E.A, PWD, CHEPAUK, CHENNAI-5.
PUBLISHED BY: **Er. S. KANNAN,** D.C.E. B.E., PUBLICATION SECRETARY, T.N.E.A, PWD, CHEPAUK, CHENNAI-5.
PRINTED BY: Mr. **K.P.THIYAGARAJAN** AT KALAIYARAM PRINTERS, 182, BELLS ROAD, CHEPAUK, CHENNAI-5 PHONE 2854 8223